
புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | டிசம்பர் 28, 2017 | புரட்சி 16 | முழக்கம் 50 | விலை: ரூ.3.00

## பெண்ணுரிமை; ஜாதி ஒழிப்பு; இந்துத்துவா எதிர்ப்பு; மாநில உரிமைகளுக்காக...

# 2017 இல் கழகத்தின் செயல்பாடுகள்

*2017 ஆம் ஆண்டு திராவிடர் விடுதலைக் கழகத்தின் முக்கிய களப்பணிகள் பற்றிய ஒரு தொகுப்பு:*

**ஜனவரி -** தமிழ்ப் புத்தாண்டு, தமிழர் திரு நாள் விழாக்கள், கலை நிகழ்ச்சிகளுடன் சென்னை, மயிலாப்பூர், கொளத்தூர், நங்க வள்ளி, கொளப் பலூர், திருப்பூர் உள்ளிட்ட பல்வேறு ஊர்களில் கழகத் தோழர்கள் கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகளுடன் மக்கள் விழாவாக நடத்தினர்.

அரியலூர் மாவட்டம் செந்துறை வட்டம் சிறுகாம்பூர் கிராமத்தில் நந்தினி என்ற தலித் மாணவி, இந்து முன்னணி கும்பலால் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து, நந்தினிக்கு நீதிகேட்டு கழக சார்பில் குடியாத்தம், திருச்செங்கோடு, அரியலூர், மதுரை, ஆத்தூர், நங்கவள்ளி, திருப்பூர், மேட்டூர் உள்ளிட்ட பல பகுதிகளில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

**பிப்ரவரி:** காதலர் நாளை பிப். 12ஆம் தேதி ஒரு நாள் விழாவாக மேட்டூரில் கலை நிகழ்வுகளுடன் கழகத் தோழர்கள் நடத்தினர். ஜாதிவெறிக்கு கணவரை பலி கொடுத்து ஜாதி ஒழிப்புக் களத்தில் நிற்கும் பெண்களுக்குப் பாராட்டும் விருதுகளும் வழங்கப்பட்டன.

கோவையில் வனப்பகுதிகளை சட்ட விரோத மாக ஆக்கிரமித்து, ‘ஈஷா’ மய்யம் நடத்தி வரும் ஜக்கிவாசுதேவ் நிறுவிய ‘ஆதியோகி சிவன்’ சிலை திறப்பு விழாவுக்கு பிரதமர் மோடி பங்கேற்க வருவதை எதிர்த்து கருப்புக் கொடி (பிப்.24) காட்டி கழகத்தினர் கைதானார்கள்.

காதலர் நாளில் ஜாதி மறுப்புத் திருமணம் புரிந்த இணையர்களுக்கு சென்னையில் கழக சார்பில் பாராட்டு விழா நடத்தப்பட்டது. (பிப்.14)

ஈரோட்டில் ‘இராமானுஜர் ஆயிரம் ஆண்டு விழா’ என்ற மத நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட காவல்துறை கண் காணிப்பாளர் பங்கேற்கவிருப்பதை எதிர்த்து கழகம் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக அறிவித்தது. விழாவில் பங்கேற்கப் போவதில்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவரும், காவல்துறை அதிகாரியும் அறிவித்தனர். கோரிக்கை வெற்றி பெற்றது.

**மார்ச் :** அன்னை மணியம்மையார் பிறந்தநாள் மார்ச் 10 அன்று திருச்சி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் நடத்தப்பட்டது. பல்வேறு துறைகளில் சாதனை செய்த பெண்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

கழகத்தில் இணைந்து, கடவுள், மதமறுப்புக் கொள்கைகளை பரப்புவதில் உறுதியாக செயல் பட்டார் என்பதற்காக கோவை கழகத் தோழர் ஃபாரூக், மத அடிப்படைவாதிகளால் படு கொலை செய்யப்பட்டபோது தமிழகமே அதிர்ந்தது. பாரூக் கொலையைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட் டங்களை கழகம் நடத்தியது.

உயர்கல்வி நிறுவனங்களில் தலித் மாணவர்கள் அவமதிப்புக்குள்ளாக்கும் ஜாதி வெறியைக் கண்டித்து தமிழ்நாடு மாணவர் கழக சார்பில் தோழர்கள் சென்னையில் ஆளுநர் மாளிகையை முற்றுகையிட்டு கைதானார்கள்.

**ஏப்ரல் :** அம்பேத்கர் பிறந்த நாள் (ஏப்.14) மேட்டூரில் சைக்கிள் பேரணி, கலை நிகழ்வு களுடன் கொண்டாடப்பட்டு விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டன. கோவையில் பாரூக் குடும்பத்துக்கு நிதி வழங்கும் நிகழ்வு (ஏப். 16) உணர்ச்சியுடன் நடந்தது. கழக சார்பில் ரூ.10 இலட்சம் நிதி குடும்பத்தினருக்கு வழங்கப்பட்டது.

சென்னையில் ஒரு நாள் குழந்தைகள் பயிற்சி முகாம் (ஏப்.30) நடந்தது.

தலைமைக் குழு கூட்டம் தலைமை நிலையத்தில் கூடி, நடுவண் அரசு அலுவலகங்களில் இந்தி எழுத்து அழிப்புப் போராட்டத்தை நடத்த முடிவு செய்யப் பட்டது (ஏப்.10).

**மே :** மோடி பா.ஜ.க. ஆட்சி கொண்டு வந்த மாட்டுக்கறி விற்பனை தடை சட்டத்தைக் கண்டித்து சேலத்தில் மாட்டுக்கறி உண்ணும் போராட்டம் நடத்தி தோழர்கள் கைதானார்கள் (மே 12). கழகத் தலைமை அலுவலகத்தில் தலைமைக் குழு கூடியது (மே 5).

**ஜூன் :** ‘இந்தித் திணிப்பை எதிர்ப்போம்; இழந்து வரும் உரிமைகளை மீட்போம்’ என்ற முழக்கத்தை முன் வைத்து சென்னை திருவான் மியூரில், தமிழர் பண்பாட்டு மாநாட்டை (ஜூன் 4) சென்னை மாவட்டக் கழகம் நடத்தியது.

அடுத்த நாள் (ஜூன் 5) பா.ஜ.க. ஆட்சியின் இந்தித் திணிப்பை எதிர்த்து சென்னையில் இந்தி எழுத்துகளை அழிக்கும் போராட்டம் நடத்தி கழகத் தோழர்கள் கைதானார்கள்.

உடுமலை திருமூர்த்தி படகுத் துறையில் திருப்பூர், கோவை மாவட்ட கழகத் தோழர்கள் இணைந்து இரண்டு நாள் பயிற்சி முகாமை சிறப்புடன் நடத்தினர்.

**ஜூலை :** சென்னை தலைமைக் கழகத்தில் தலைமைக் குழு கூடி பரப்புரைக்கான திட்டங்களை உருவாக்கியது.

காமராசர் பிறந்த நாள் விழாக்கள், சென்னை, திருப்பூர், மேட்டூர், அந்தியூர் உள்ளிட்ட பல பகுதிகளில் கழக சார்பில் நடத்தப்பட்டன.

**ஆகஸ்டு :** ‘இழந்து வரும் உரிமைகளை மீட்போம்; தமிழகத்தின் தனித்தன்மை காப்போம்’ என்ற முழக்கத்தோடு தமிழகம் தழுவிய பரப்புரைப் பயணத்தை ஆகஸ்டு 5ஆம் தேதி கழகம் தொடங்கியது. கோவை, சென்னை, மேட்டூர், மயிலாடுதுறை, மதுரையிலிருந்து கழகப் பரப்புரை குழுக்கள் புறப்பட்டன. திராவிடர் விடுதலைக் கழகம் தொடங்கப்பட்ட நாளான ஆக.12ஆம் தேதி திருச்செங்கோட்டில் நிறைவு விழா மாநாடு எழுச்சியுடன் நடந்தது.

விநாயகன் ஊர்வலத்தை நடத்தும் இந்து அரசியல் அமைப்புகள் சட்டங்களை மீறி செயல்படுவதை கட்டுப்படுத்தக் கோரி, ஈரோடு, சென்னை, திருப்பூர் உள்ளிட்ட நகரங்களில் கழகத் தோழர்கள் காவல்துறை அதிகாரி களிடம் மனு அளித்தனர்.

விநாயகன் மத அரசியல் ஊர்வலத்தை எதிர்த்து சென்னை மாவட்டக் கழக சார்பில் பெரியார் கைத்தடி ஊர்வலம் நடத்தி தோழர்கள் கைதானார்கள் (ஆக.31).

**செப்டம்பர்:** 1,200க்கு 1,176 மதிப்பெண் பெற்றிருந்தும் ‘நீட்’ தேர்வு எனும் தடையால் மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்காத நிலையில் அனிதா என்ற தலித் பெண், தன்னைத் தானே மாய்த்துக் கொண்டார். ‘நீட்’டுக்கு உயிர்ப்பலியான அனிதாவின் மரணத்துக்கு நீதி கேட்டு தமிழகமே கொதித்தது. சென்னையில் பா.ஜ.க. தலைமை அலுவலகத்தை முற்றுகை யிடச் சென்ற கழகத் தோழர்கள் கைதுசெய்யப் பட்டனர். சேலம், ஈரோடு, கோவை, திருப்பூர் உள்ளிட்ட பல்வேறு ஊர்களில் கழகம் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தியது.

முதல்கட்ட பரப்புரைப் பயணத்தில் விடுபட்ட

(4ஆம் பக்கம்)

## மக்கள் மன்றத் தோழர்கள் கைது! கழகம் கடும் கண்டனம்



**காஞ்சி தொடர்வண்டி நிலையத்தில் அம்பேத்கர் படத்தை குப்பையில் வீசிவிட்டு சங்கராச்சாரி படத்தை வரைந்ததைத் தட்டிக் கேட்டு களமிறங்கிய காஞ்சி மக்கள் மன்றத் தோழர்கள் கைதுசெய்யப்பட்டதோடு அவர்கள் மீது பிணையில் வர முடியாத பிரிவுகளில் காவல்துறை வழக்குப் பதிவு செய்துள்ளது. திராவிடர் விடுதலைக் கழகம் இதை வன்மையாகக் கண்டிக்கிறது. இது குறித்து காஞ்சி மக்கள் மன்றம் சார்பில் தஞ்சைத் தமிழன் விடுத்துள்ள அறிக்கை:**

21 டிசம்பர் 2017 அன்று காஞ்சிபுரம் புதிய இரயில் நிலையத்தின் வாயிலில் மாட்டப்பட்டிருந்த டாக்டர் அம்பேத்கரின் உருவப்படத்தை குப்பையில் போட்டுவிட்டு அந்த இடத்தில் இந்துமதக் குறியீடுகளும், அதை ஒட்டிய சுவர்களில் சங்கராச்சாரிகளின் படங்களும் வரையப்பட்டிருந்தன. அவ்விடத்தில் தலைவர் அம்பேத்கரின் படத்தை மீண்டும் நிறுவிய குற்றத்திற்காக டிச.27 அன்று மக்கள் மன்றத்தைச் சேர்ந்த ஒருங்கிணைப்பாளர் மகேஷ் மற்றும் பொறுப்பாளர்கள் ஜெசி, தஞ்சை தமிழன், பாலு ஆகியோர் பிணையில் வர முடியாத பிரிவுகளில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நிலைய மேலாளர் சீனிவாசலு அவர்கள் மீது இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இன்று 26-12-2017 காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களை இது சம்பந்தமாக பார்த்து விட்டு திரும்புகையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இது சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்காக ரயில்வே துறை மேற் கொள்ளும் புதுப்பித்தல் பணி என்றால் அமுதசுரபி பாத்திரத்துடன் காஞ்சி மாநகரை வலம் வந்த பௌத்த துறவி மணிமேகலை, மனிதனின் மானத்தைக் காக்கும் நெசவுத் தொழிலாளர்கள், பல்லவர்களின் கட்டிடக் கலைக்கு சான்றாக விளங்கும் காஞ்சி மற்றும் மாமல்லபுர கோயில்கள், சமண காஞ்சி என்றழைக்கப்படும் திருப்பருத்திக்குன்றத்தில் உள்ள சமணக்கோயில்கள், பேரறிஞர் அண்ணா என அனைத்தும் அடங்க வேண்டும். இந்தியா ஒரு மதசார்பற்ற நாடு. அரசு அலுவலகங்களில் கடவுள் படங்கள் இருக்கக் கூடாது என மத்திய மாநில அரசு ஆணைகள் உள்ளன. ஒரு மதத்தின் படங்களை மட்டும் வைப்பது அமைதியை குலைத்து சட்ட ஒழுங்கு பிரச்சனைகளை ஏற்படுத்தும். நாட்டின் மதச்சார்பற்ற தன்மையையும் ஒழித்துக் கட்டவே மத்திய பாஜக அரசு செயல்பட்டு வருகிறது. நாட்டின் மதச்சார்பற்ற தன்மையைக் காப்பாற்ற நாடு காவி பரிவாரங்களிடம் முழுமையாக செல்வதைத் தடுக்க முற்போக்குச் சக்திகள் ஆகிய நாம் ஒன்றிணைவோம்.

# கீழ்வெண்மணி: மறைக்கப்படும் உண்மைகள்

*கீழ்வெண்மணி படுகொலையில் வரலாற்றில் மறைக்கப்படும் பகுதியை சுட்டிக்காட்டுகிறார் பசு. கவுதமன். 'தடம்' இதழுக்கு அவர் எழுதிய கட்டுரையின் முழுமையான வடிவம்.*

25.12.1968, மனிதகுல வரலாற்றில் மறக்கமுடியாத கருப்பு தினம். 44 மனித உயிர்கள், மனிதர்கள் என்று சொல்லப்பட்டவர்களாலேயே கொளுத்தப்பட்ட கொடும் கோரநாள். ஆயிற்று அய்ம்பது ஆண்டுகள் !

இந்த அய்ம்பது ஆண்டுகளிலும் எப்போதும் , எல்லோராலும் சொல்லப்பட்டது, "அரைப்படி நெல் கூலிஉயர்வு கேட்டதற்காக..." இது கூலி உயர்வு மட்டுமேயான பிரச்சனையா? அல்லது அந்த மிகப்பெரிய அவலச் சம்பவத்தை துயர விளைவை அப்படித்தான் குறுக்கி, சுருக்கிவிட முடியுமா?

62களின் இறுதிகளிலிருந்து நாகை தாலுக்காவில் வளர்த்தெடுக்கப்பட்ட போராட்டச் சூழலில், ஆய்மழை தங்கவேலு , சிக்கல் பக்கிரிசாமி, இருஞ்சூர் சின்னப்பிள்ளை, கேக்கரை ராமச்சந்திரன் ஆகியோர்களின் உயிர்பலி என்ற தொடர்ச்சியின் உச்சகட்ட வெளிப்பாடுதான் வெண்மணியின் 44 மனித உயிர்களை பலிகொண்ட தீயின் கங்குகள்.!


" மோதலுக்குக் காரணம் நெல் உற்பத்தியாளர் சங்கத்திற்கும், இடது கம்யூனிஸ்ட் விவசாயிகளுக்கும் இடையே உள்ள வெறுப்பும், இடது கம்யூனிஸ்ட் விவசாயிகளை சங்கத்திலிருந்து பிரித்து, 'விசுவாசமான தொழிலாளர்களாக' மாற்ற நெல் உற்பத்தியாளர்கள் செய்த முயற்சிதான் இந்த மோதலுக்குக் காரணம் கூலிப்பிரச்சனை மட்டுமே என்று சொல்லமாட்டேன் " என்று 28.12.1968 தி இந்தியன் எக்ஸ்பிரஸில் அன்றைய அய். ஜி.யின் அறிக்கை கண்ணில்படுவதாக தோழர் மைதிலி சிவராமன் தன்னுடைய நூலில் பதிவு செய்கின்றார்.

இன்னும் அவரே, தான் வெண்மணிக்குப் பக்கத்தில் உள்ள ஆலத்தம்பாடியில் சில மிராசுகளுடன் நடத்திய உரையாடலின் போது, " முன்னெல்லாம் இங்கே ரொம்ப அமைதியா இருந்திச்சி, தொழிலாளிங்க கடுமையா உழைப்பாங்க, மரியாதையா இருப்பாங்க ஆனா இப்போ? என் வீட்டுப் புழக்கடையில் நின்னு என்னோடு பேசினவன் இப்போ செருப்பு போட்டுகிட்டு என்னோட வீட்டு வாசலுக்கு வந்து, எங்க தலைவர் இன்னிக்கு சாயங்காலம் ஒரு பொதுக்கூட்டத்திலே பேசுறாரு நான் அஞ்சரக்கெல்லாம் போவனுங்கறான். அவன் தலைவரு எங்க வீட்டுக்குப் பக்கத்திலேயே கூட்டம் போடுறாரு. இவன் செவப்புக் கொடிய எடுத்துக்கிட்டு தெருவெல்லாம் சுத்துறான். இவனுங்க எல்லாருக்கும் திமிரு புடிச்சிப் போச்சு. இதுக்கெல்லாம் காரணம் இந்த கம்யூனிஸ்ட்கள்தான். இப்பல்லாம் இவனுங்க ஒடம்புல பயமுங்கறதே இல்ல " என்றும் பதிவு செய்கின்றார்.

துவக்க காலகட்டங்களில் 'பண்ணை ராஜ்யாதிபதிகளுக்கு' நிலப்பிரபுக்களுக்கு எதிரான போராட்டத்தில் பொது உடைமை இயக்கம், தாழ்த்தப்பட்டவர்களிடமிருந்த சாதியக் கட்டுப் பாட்டை அப்படியே ஏற்றுக்கொண்டுதான் இயக்கத்தைக் கட்டமைத்தது. கட்சி வேறு, நாட்டாண்மை சாதிய முறைகள் வேறு என்று இருந்த நிலை மாறி, "சாதிக்கட்டுப்பாட்டுக்குள் இருந்த கிராம நிர்வாகங்கள், கட்சிக் கட்டுப்பாட்டுக்குள் வந்ததற்குப் " பின்னால் நாட்டாண்மைகள் கட்சியின் தலைவர்களாகவும், சாதிய உணர்வுகள் , கொள்கை உணர்வுகளாக உருமாற்றம் பெறுகின்றது. இவைகளெல்லாம் 64களில் நாகை தாலுக்காவில் முழுவீச்சாக நடைபெற்று "நாகை தாலுக்கா ஒரு செக்டேரியன் போக்கில்போகிறது" என்று பேசப்படக்கூடிய பேச வேண்டிய நிலை ஏற்பட்டது ஏன்?

54களில் பெரியாரால் துவக்கப்பட்ட திராவிடர் விவசாய தொழிலாளர்கள் சங்கத்தினை நாகை மாவட்டத்தில் மிகப்பெரும் இயக்கமாக வளர்த்தெடுத்தத் தோழர்கள் பாவா நவநீத கிருஷ்ணன் மற்றும் ஏ.ஜி.கஸ்தூரிரெங்கன் ஆகிய இருவரும் தந்தை பெரியாரிடம் உண்டான கருத்து வேறுபாட்டால் இயக்கத்திலிருந்து விலகுகின்றனர். அதில் தோழர் ஏ.ஜி.கஸ்தூரிரெங்கன் மிகப் பெரும் பாலான திராவிடர் விவசாயத் தொழி லாளர்கள் சங்கத் தோழர்களோடு பொதுஉடைமை இயக்கத்தின் தமிழ்நாடு விவசாயசங்கத்தின் செங்கொடி அமைப்பில் இணைகின்றார். அதற்குப் பின்னால் கீழைத் தஞ்சையின் வயல் வரப்புகளில் மார்க்ஸும், பெரியாரும் இணைந்தே நடக்கின்றார்கள். இதை தோழர் ஏ.ஜி.கே,

"சரியான அனுபவ அறிவும், ஆராய்ச்சி அறிவும், பட்டறிவும், படிப்பறிவும் உள்ளவர்களால் 'செழுமைப்படுத்தப்பட்ட மார்க்ஸியமே பெரியாரியம்' என்ற இவ்வுண்மையினை நாம் நமது நடவடிக்கைகளால் முன் வைத்தோம். அதுவும் கூட, நாம் தனித்து எதையும் செய்யவில்லை. செயல்திட்டத்தைக் குழுக் கூட்டத்தில் முன் வைத்து விவாதித்த பிறகே முடிவுக்கு வருவது வழக்கம். கமிட்டியில் தீர்மானிக்கப் படாத எந்த ஒரு போராட்டமும் நடைமுறைப் படுத்தப்பட்டதில்லை. தனிநபர் முடிவு எடுப்பது என்பது ஒருபோதும் அனுமதிக்கப்பட்டதில்லை. அந்த அடிப்படையில் முதலில் வாழ்வாதாரம், கூடவே தன்மான வாழ்விற்கான நடவடிக்கை என்ற நிலைப்பாட்டில் நடவடிக்கைகளை அமைத்தோம்" என்று சொல் கின்றார். அந்த செயல் திட்டங்களின், போராட்டங்களின் விளைவுகள்தான்,



**கோபாலகிருஷ்ண நாயுடு அழித்தொழிப்பில் தொடர்புடையவர்கள் தலைமறைவான நிலையில் திராவிடர் கழகத் தோழர்கள் 9 பேர் கைதாகி சிறையில் அடைக்கப்பட்டனர்.**

"விவசாயத் தொழிலாளர்கள் அனைவரும் நெல் உற்பத்தியாளர் சங்கத்தில் சேர்ந்துவிட வேண்டுமென்று" சொல்லப்பட்ட உத்தரவு, தன் சொந்த ஊரிலேயே செவிடன் காதில் ஊதிய சங்காய் மாறிப்போய் தன்னுடைய அதிகாரநிலையிலிருந்து தான் கீழே விழுந்துவிட்ட மனநிலையில் உண்டான அதிகாரவெறி, பண்ணை ராஜ்ஜியத்திற்கே உரிய கவுரவப்பிரச்சனை, அத்தோடு சாதித் திமிர் இத்தனையும் சேர்ந்து ஒரு பேட்டை ரவுடியைப் போல கைகளில் தீப்பந்தத்தினை தூக்க வைத்ததினால் தான் ராமையாவின் குடிசை கொழுந்துவிட்டு எரிந்து 44 உயிர்களை பலி கொண்டதில் முடிந்தது.

கூலி உயர்வுதான், ஆனால் அதில் உரிமையும் - சுயமரியாதையும் முதன்மையானதாக மாற்றப் பட்டது. உழைக்கும் விவசாய வர்க்கத்தின் விடுதலை வெறும் கூலி உயர்வால் மட்டுமே வந்துவிடாது என்ற தெளிவும், நியாயமான கூலியில் சமரசமில்லை என்ற உறுதியும், 'அடிபொலி' , 'பட்டறைக்காய்ச்சல்', 'குட்டை மரக்கால்', 'உயர மரக்கால்' என்று எதை வேண்டுமானாலும் சொல் ஆனால் அறுவடை செய்த எல்லா நெல்லையும் மூட்டை போடு, அத்தனை மூட்டைக்கும் கூலி கொடு என்ற உரிமையும், அந்தக் கூலியை நீ கொடுக்கும் நேரத்தில் உன் வீட்டுப் புழக்கடையில் நின்று வாங்கமாட்டேன். களத்து மேட்டிலேயே கணக்கை முடித்து விட்டுப்போ என்ற சுயமரியாதையும் சேர்ந்தே இருந்தது மட்டுமல்ல இப்படி கேட்டவர்களில் முன் வரிசையில் பெண்கள் இருந்தார்கள் என்பதும் அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை என்பதும் உண்மை.

"அரை படி என்ன இன்னும் கூடுதலாக அரைபடி தருகிறேன் வாங்கிக்கொள். ஆனால் நீ எனக்கு உத்தரவு போட்டு இப்படி அள, இங்க கொடு என்று சொல்லக்கூடாது. நான் போடுவேன் , நீ பொறுக்கிக் கொள்" என்ற பண்ணை ராஜ்ஜியாதிபதிகளின் அதிகார சாதிவெறி . இந்த முரண்பாடுதான் -

வெண்மணி தொடர்பான செயல்பாட்டில் நேரடியான பங்களிப்பைப் பெரியார் நிகழ்த்தா விட்டாலும் தத்துவார்த்தப் பின்புலமாக செயல்பட்டிருப்பதை மறுக்கமுடியாது. வெண்மணி சம்பவம் நடக்கும்போது உடல்நிலை சரியில்லாமையால் மருத்துவமனையில் இருக்கின்றார். அவரிடம் இது குறித்த தகவல் சொல்லப்படுகின்றது. அன்றே மருத்துவ மனையிலிருந்து வீட்டிற்கு வருகின்றார். அதையொட்டி, " இந்தியர்கள் ஆட்சி புரியும் வரை மனுதர்மம்தான் ஆட்சி புரியும்" என்னும் தலையங்கத்தினை விடுதலையில் வெளியிடுகின்றார். அதற்குப் பின் செம்பனார்கோவில் கூட்டத்தில் வழக்கம்போல இந்திய கம்யூனிஸ்டுகள் மீதான விமர்சனத்தை அங்கும் வைத்தார். அடுத்த சில மாதங்களில் சாதி ஒழிப்பு மாநாட்டு அறிவிப்பு வெளியிடுகின்றார். அந்த நேரத்தில் அண்ணாவின் உடல்நிலை மோசமாகி, அவர் வெளிநாடு அழைத்துச் செல்லப் படுகின்றார். அவர் வந்தபின் மீண்டும் அம்மாநாட்டு வேலைகள் தொடங்குகையில் அண்ணா இறந்து விடுகின்றார். இந்தச் சூழ்நிலையால் அந்த மாநாடு நடைபெற வில்லை. அதுவேதான், அதனுடைய வளர்ச்சிப்போக்கில் 1973 ஆம் ஆண்டு ' சமுதாய இழிவு ஒழிப்பு மாநாடாக' மாறுகிறது.

வெண்மணிப் படுகொலைக்குப் பின், கோபால கிருஷ்ண நாயுடு அழித்தொழிப்பு நடை பெற்றது. அதில் நேரடியாக புரட்சிகர இடதுசாரி அமைப்பினைச் சேர்ந்த ஏழுபேர் பங்கேற்றனர். அவர்கள் தலைமறைவாகிவிடுகின்றனர். கீழ்வேளூர் காவல் நிலையத்தில் வழக்கு எண் 254/1980 ல் முதல் தகவல் அறிக்கையில் நந்தன், செல்வராஜ், மணியன், குமார் மற்றும் நான்கு பேர் என்று பதிவு செய்யப்படுகின்றது. பிறகு இதில் தொடர்பில்லாத, சந்தேகத்திற்குரியவர்கள் எனச் சிலரை கைது செய்கின்றனர். அவர்களில் திருப்பணிப்பேட்டை, திராவிடர்கழகத்தைச் சேர்ந்த திராவிடமணியை அடித்துத் துன்புறித்தி அப்ரூவர் ஆக்குகின்றனர். அவரது வாக்குமூலத்தின் அடிப்படையில் 11பேர்கள் கைது செய்யப்பட்டு வழக்கில் சேர்க்கப்படுகின்றனர். அவர்களில் எட்டு பேர் திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவர்கள். திராவிடமணியைச் சேர்த்து ஒன்பதுபேர். 10.05.1982 அன்று நாகை நீதிமன்றத்தில் திராவிடமணியைத் தவிர்த்து மற்ற அனைவருக்கும் தண்டனை வழங்கப்படுகின்றது. (இதில் மகாலிங்கம் என்ற தி.க. தோழர் வழக்கு நடக்கும்போதே இறந்துவிடுகின்றார். எனவே அவருக்கு தண்டனை இல்லை ) அதை எதிர்த்து இவர்கள் மேல்முறையீடு செய்கின்றார்கள் . உயர் நீதிமன்றத்தால் மார்ச் மாதம் 1985ம் ஆண்டு அனைவரும் விடுதலை செய்யப்படுகின்றனர். (திராவிடர் கழகத் தோழர்களுக்காக இந்த வழக்கினை தனியாளாக நின்று நடத்தியவர் அன்மையில் மறைந்த குடந்தை ஆர்.பி.எஸ். ஸ்டாலின் அவர்கள். அவர் அப்போது திராவிடர் மாணவர் இளைஞரணி மாநில, மாவட்டப் பொறுப்பாளர்) ஆனால் இந்த இடைப்பட்ட காலத்தில் இந்தத் தோழர்கள் கடுமையான சித்ரவதைக்கு உள்ளாக்கப்பட்டனர். மன மற்றும் உடல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்டனர். இந்தத் தீர்ப்பின் அடிப்படையிலேயே தலைமறைவாக இருந்த புரட்சிகர இடதுசாரி தோழர்கள் சரணடைந்த பிறகு விடுவிக்கப்படுகின்றனர். இந்த இடத்தில் எனக்கான கேள்விகள் என்னவென்றால், இவ்வளவு இன்னல்களுக்கு உட்பட்டு திராவிடர் இயக்கத் தோழர்கள் சிந்திய ரத்தம் ஏன் இதுவரை பதிவு செய்யப் படவில்லை. அது மார்க்சிஸ்ட் கட்சியானாலும், புரட்சிகர இடதுசாரி அமைப்பானாலும், திராவிடர் கழகமானாலும் சரி, திராவிடர் கழகத்தைக் கேட்கமுடியாது , காரணம் எங்களுக்குத் தொடர்பில்லை என்று சொல்லிவிட்டார்கள். இந்தத் தோழர்கள் பற்றிய பதிவுகளைத் தவிர்த்தது ஏன் என்பதுதான்.

**கட்டுரையாளர்**
**'நான் சொன்னால் உனக்கு ஏன் கோபம் வரவேண்டும்' உள்ளிட்ட பெரியார் தொகுப்புகளின் பதிப்பாசிரியர்**

## வேலூரில் பெரியார் நினைவு நாள்: மக்கள் மன்றம் எழுச்சியுடன் நடத்தியது

காஞ்சி மக்கள் மன்றம் பெரியார் நினைவு நாளை டிசம்பர் 24 அன்று வேலூரில் எழுச்சியுடன் நடத்தியது. பெரியார் பூங்கா அருகில் மாலை 5 மணியளவில் மக்கள் மன்றத்தின் புரட்சிகர கலைநிகழ்ச்சிகளுடன் நிகழ்வுகள் தொடங்கின. மக்கள் மன்ற தோழர்கள் கோபி வரவேற்புரையாற்ற சதீஷ் தலைமை தாங்கினார். நிகழ்வில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் சிறப்புரை நிகழ்த்தினார். விடுதலை சிறுத்தைகள் மாநில அமைப்புச் செயலாளர் நீலசந்திரகுமார், மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் ஷாஜஹான், திராவிட இயக்கத் தமிழர் பேரவை துணைப் பொதுச் செயலாளர் சிங்கராயர், எஸ்.டி.பி.அய். மாநில பொறுப்பாளர் ஜி.எஸ். இக்பால், கண் மருத்துவர் தி.ச. முகமது சயி, விடுதலை சிறுத்தைகள் மாவட்ட செயலாளர் செல்வராஜ், தமிழக வாழ்வுரிமை கட்சி துணைப் பொதுச்செயலாளர் மருத்துவர் சுதாகர், ஆவணப்பட இயக்குனர் பாலா, திராவிடர் விடுதலைக் கழக மாவட்ட செயலாளர் சிவா, மக்கள் மன்றம் தோழர்கள் அபிநயா, திலகவதி ஆகியோர் கலை நிகழ்ச்சிகளுக்கு இடையிடையே உரையாற்றினர்.

நிகழ்ச்சிகளை மகேஷ் ஒருங்கிணைத்தார். மேடையில் 'தலை நிமிர்ந்தோம் இவர்களால்' என்ற முழக்கம் எழுதப்பட்டு, பெரியார் அம்பேத்கர் படங்கள் வரையப்பட்டிருந்தன. 5 மணி நேரம் தொடர்ந்து நடந்த நிகழ்ச்சியில் மக்கள் கலையாமல், கொட்டும் பனியில் கருத்துகளைக் கேட்டனர்.



# கழகம் எடுத்த பெரியார் நினைவு நாள்

**பேராவூரணி :** பேராவூரணியில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. திராவிடர் விடுதலைக் கழக மாவட்ட அமைப்பாளர் சித.திருவேங்கடம் தலைமையில் ஒன்றியப் பொறுப்பாளர்



சீனி. கண்ணன், தமிழக மக்கள் புரட்சிக் கழக பரப்புரைச் செயலாளர் ஆறு நீலகண்டன் ஆகியோர் சிலைக்கு மாலை அணிவித்தனர். மெய்ச்சுடர் நா.வெங் கடேசன், தம.பு.க. இரா மதியழகன், ஆயில் மதியழகன், தி.வி.க நகர அமைப்பாளர் தா. கலைச்செல்வன் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

ஆணவப் படுகொலைகளைத் தடுக்க தனிச் சட்டம் கொண்டு வர வேண்டும். காதல் திருமணம் செய்தவர்களுக்கு தனி இட ஒதுக்கீட்டை வழங்க வேண்டும் என்று முழக்கமிட்டனர்.

**குமரி :** பெரியாரின் 44ஆவது, நினைவு நாளை முன்னிட்டு, திராவிடர் விடுதலைக் கழகம், குமரி மாவட்டம். சார்பாக 24-12-2017 ஞாயிறு காலை 9.00மணிக்கு தக்கலை வட்டாட்சியர் அலுவலகம் அருகே வீரவணக்க நிகழ்வு நடைப்பெற்றது. நீதிஅரசர் (பெ.தொ.க தலைவர்) தலைமை தாங்கினார். கேரளாபுரம் முருகன் (விடுதலை



சிறுத்தைகள் கட்சி, நில மீட்பு இயக்கம். மாநில துணைச் செயலாளர்), சத்தியதாஸ் (வி.சி.க,நி.மீ.இ, குமரி மே.மா.செயலாளர்) ஆகியோர் முன்னிலை வகித்தனர். போஸ் (மார்க்சிய சிந்தனை மய்யம், குமரி மாவட்டம்) பிரசாத் (தீண்டாமை ஒழிப்பு முன்னனி), செல்வி மேரி (பெ.தொ.க.) மற்றும் கழகத் தோழர்கள் அனீஸ், விஸ்னு, மஞ்சு குமார், இராஜேஸ் குமார் ஆகியோர் கலந்து கொண்டு வீரவணக்க முழக்கங்களை முழங்கினர்.

**திண்டுக்கல் :** திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக மாவட்ட அமைப்பாளர் மருதமுத்து, சென்னை துரை அருண் (வழக்குரைஞர்), திண்டுக்கல் செல்வராஜ், பழனி, துரை மணப்பாறை ஒன்றியப் பொறுப்பாளர் வீ. தனபால் மணப்பாறை




கார்த்திகேயன். கும்மம்பட்டி கனேசன், கரூர் மோகன்தாஸ், பெரியார் பிஞ்சுகள் தமிழரசி, மணப்பாறை தேன்மொழி பிரவின், கரூர் பவதாரினி. திண்டுக்கல் தபெதிக கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் இணைந்து நினைவு நாளில் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

**மணப்பாறை :** திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக ஒன்றிய பொறுப்பாளர் தனபால், கார்த்திகேயேன், அறிவுச்செல்வன் பெரியார் பிஞ்சுகள் தேன்மொழி, பிரவின். திராவிடர்கழகம் சார்பாக இரும்பொறை பிச்சை, திருமால், சேகர், சிளம்ஸ் இரமேசு, திமுக.சார்பாக துரைகாசிநாதன், பூக்கடை முருகேசன், பசுலுதின், செயாலானி, விசிக.



சார்பாக மதனகோபால், சீ.இரா ஆனந்தன், ஆதி தமிழர் பேரவை சார்பாக ஆதிசக்தி, கண்ணன், ஆதி திராவிடர் நலப்பேரவை. சார்பாக ஆதி பெரு பழனியப்பன், மணிவண்ணன் ஆகியோர் கலந்து கொண்டு அய்யா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

**சேலம் மேற்கு :** 24.12.17 காலை 9.30 மணியளவில் சேலம் மேற்கு மாவட்ட கழகம் சார்பில் கோனூர் சமத்துவபுரத்தில் அமைந்துள்ள பெரியார் சிலைக்கு மாவட்ட கழகச் செயலாளர் சி.கோவிந்தராசு தலைமையில் தோழர்கள் மாலை அணிவித்து வீர வணக்கம் செலுத்தினர். பின்னர் 11.00 மணியளவில் மேட்டூர் பெரியார் படிப்பகத்தில் மாவட்ட



கலந்துரையாடல் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் சூரியகுமார் தலைமை தாங்கினார். கூட்டத்தில் வரும் செயலவைக் கூட்டத்தில் கழக வளர்ச்சி நிதி அளிப்பது, பெரியார் முழக்கம், நிமிர்வோம் இதழ்களுக்கு சந்தா ஒப்படைப்பது குறித்து விவாதிக்கப்பட்டது. மேட்டூர் நகர செயலாளர் தோழர் சுரேசுகுமார் நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

**சென்னை :** சென்னையில் டிசம்.24 காலை 10 மணிக்கு கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் சென்னை சிம்சன் பகுதியில் அமைந்துள்ள பெரியாரின் சிலைக்கு மாலை அணிவித்து தோழர்கள் வீரவணக்கம் செலுத்தினார். தொடர்ந்து, தியாகராயர் நகர் பகுதியில் இளந்தமிழகம் செந்தில், இளந்தமிழகம்



அமைப்பைச் சார்ந்த தோழர்கள் மற்றும் கழகத் தோழர்கள் இணைந்து பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி ஜாதி மறுப்பு உறுதிமொழி எடுத்தனர்.

பின்பு ஆலந்தூர், மந்தைவெளி, இராயப்பேட்டை பகுதிகளில் அமைந்துள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்தி ஜாதி மறுப்பு உறுதிமொழி எடுத்தனர்.

இதில் தென்சென்னை மாவட்டத் தலைவர் வேழவேந்தன், மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி, மாவட்ட அமைப்பாளர் பிரகாசு, வடசென்னை மாவட்டத் தலைவர் ஏசுகுமார், மாவட்டச் செயலாளர் செந்தில்குமார் (FDL), தலைமை நிலையச் செயலாளர் தபசிகுமரன், இணையத்தளப் பொறுப்பாளர் விஜயகுமார், தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகரன் மற்றும் கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.

**நாமக்கல் :** பெரியாரின் 44ஆவது நினைவு நாளையொட்டி ( 26.12.2017) திராவிடர் விடுதலைக் கழகம் நாமக்கல் மாவட்டம் சார்பாக, திருச்செங்கோடு, ராசிபுரம், குமாரபாளையம் போன்ற பகுதிகளில் வீரவணக்க நிகழ்வு நடைபெற்றது.



திருச்செங்கோடு மற்றும் பள்ளிபாளையம் நகரங்கள் சார்பாக, திருச்செங்கோட்டில் அமைந்துள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்தப்பட்டது. நிகழ்வில் மாவட்ட செயலாளர் சரவணன், மாவட்ட பொருளாளர் முத்துப்பாண்டி, திருச்செங்கோடு நகர ஒன்றிய அமைப்பாளர் சதீஷ், பள்ளிபாளையம் நகர செயலாளர் பிரகாஷ் மற்றும் திருச்செங்கோடு, பள்ளிபாளையம் நகர தோழர்கள் கலந்து கொண்டனர்.

ராசிபுரம் நகர திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக, பாரதிதாசன் சாலையில் உள்ள கழக அலுவலகம் முன் பெரியார் படத்துக்கு மாலை அணிவிக்கப்பட்டது. நிகழ்வில், சுமதி இராசிபுரம், பாலு.வி. தலைவர் நகர வளர்ச்சி மன்றம், தி.மு.க, ஜோதிபாசு. நகர செயலாளர், ம.தி.மு.க, மணிமாறன், நகரசெயலாளர் சி.பி.ஐ, மகேந்திரன், இரா. வழக்கறிஞரணி மா.செயலாளர், வி.சி.க. நீலவானத்து நிலவன், ஆ. மா. துணை செயலாளர், வி.சி.க, கண்ணன், மா.தலைவர், ஆதித் தமிழர் பேரவை, பெருமாள் மா.செயலாளர் தூய்மை தொழிலாளர் சங்கம், குபேர்தாஸ்-தலைவர் கோல்டன் நற்பணி சங்கம் மற்றும் நகர தோழர்கள் கலந்து கொண்டனர். பெரியாரின் பதாகைக்கு மாலை அணிவித்து முழக்கங்கள் எழுப்பி வீரவணக்கம் செலுத்தினர். மேலும், குமாரபாளையம் நகரம் சார்பாக, கத்தேரி, சமத்துவபுரத்தில் அமைந்துள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்தப்பட்டது. நிகழ்வில் மாவட்டத் தலைவர் சாமிநாதன், தண்டபாணி, கேப்டன் அண்ணாதுரை, கலைமதி போன்ற நகர தோழர்கள் கலந்து கொண்டனர்.

**விழுப்புரம் :** விழுப்புரம் மாவட்டம் நயினார் பாளையம் கிராமத்தில் பெரியார் நினைவு தினத்தை முன்னிட்டு 24-12-2017 அன்று அவரின் கொள்கைகளுக்கு மதிப்பளிக்கும் விதமாக பெரியாரின் முழு உருவ சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. ஒரு இசுலாமியராக இருந்தும்



பெரியார் தலைமையில் சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்ட க.அசன், பெரியார் தலைமையில் சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்ட புலவர் கு.அண்டிரன், ஆசிரியர். அங்கமுத்து, ஆ.நாகராசன், ந.சகாதேவன், ந.வெற்றிவேல், க.மதியழகன், சுப்ராயபிள்ளை, சேரன், இராச்சந்திரன், தண்டபானி, செல்வம் ஆகியோர் கலந்து கொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.


"புரட்சிப் பெரியார் முழக்கம்"

ஆண்டுக்கட்டணம் ரூ.200

தொடர்புக்கு:
ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 9841489896
periyarmuzhakkam@gmail.com

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# "அதோ! மனித இனத்தின் தூதன் போகின்றான்!"



பெரியார் இறுதி ஊர்வலம் நடந்த டிசம்.25,1973 நாளில் 'மக்கள் குரல்' நாளேட்டில் மறைந்த மூத்த பத்திரிகையாளர் சோலை எழுதிய உணர்ச்சிகர கட்டுரையை இங்கு வெளியிடுகிறோம். ஆர்.

சமுதாயத்தைச் சீர்திருத்த வந்த சரித்திர நாயகர்கள் பலரை வரலாறு சந்தித்திருக்கிறது. சமுதாயத்தில் மறுமலர்ச்சி காண போதி மரத்திலிருந்து புறப்பட்ட புத்தன் வெற்றி பெறவில்லை. அவனது சமுதாய மறுமலர்ச்சி சமயத்தின் ஒரு கிளையானது.

தென்னகத்தே ஒரு இராமலிங்கன் தோன்றினான். முடை நாற்றம் வீசுகின்ற மூடப் பழக்கங்களைச் சுட்டெரிக்கப் புறப்பட்டான். கடைசியில், "கடை விரித்தேன்; கொள்வாரில்லை" என்று கடையை மூடி நடையைக் கட்டினான். அவனது இயக்கமும் சமயத்தின் ஒரு வடிகாலானது.

ஆனால் இந்த நூற்றாண்டில் ஈரோட்டிலிருந்து ஒரு வெண்தாடி வேந்தன் ஊன்றிய தடியோடு ஊர் முழுக்கச் சுற்றுலாக் கிளம்பினான். அவன் தனது சமுதாய மறுமலர்ச்சி இயக்கத்திற்கு சமுதாயத்தை, கடவுளை, சாஸ்திரத்தை அடித்தளமாகக் கொள்ளவில்லை. அத்தனைத் தீமைகளுக்கும் அவைகளே ஊற்றுக்கண் என்பதை உணர்ந்தான்! எனவே சாதியைச் சாடினான்! சமயத்தைச் சாடினான்! கடவுளர்களை வாதுக்கு அழைத்தான்! அவன் தேவதூதன் அல்ல; மனித இனத்தின் மங்காப் புகழ் கொண்ட தூதன். **மனித இனத்தின் அந்தத் தூதன் அதோ! போகின்றான்.**

சாதிக்குள்ளே - சமயத்திற்குள்ளே குட்டிக்கரணம் போட்டவர்களையெல்லாம் - அவர்கள் எவ்வளவு பெரிய சமுதாயச் சீர்திருத்தவாதிகளாகயிருந்தாலும் சாதி, சமயத்தின் காவலர்கள் முக்காடு போட்டு, விபூதிப் பொட்டலத்தைக் கொடுத்துக் கடவுளர்களாகவோ ஞானிகளாகவோ ஆக்கி, அவர்களது கதையை 'முற்றும்' என்று எழுதினர். ஆனால் அவர்களை வென்று, சாதிகளையும் வென்று இன்றைக்குக் கலப்பு மணம் செய்தால் அரசுப் பரிசு என்ற நிலையை உருவாக்கிய **மனித தூதன் அதோ! போகின்றான்!**

தென்னகத்தில் தேசிய விடுதலை இயக்கமே அவனது வீட்டுத் தொட்டிலிலேதான் பிறந்து வளர்ந்தது. அதற்காக அவன் இழந்தது ஏராளம்! பொது நிலையங்களில் அவன் ஏற்றிருந்த 29 பதவிகளைத் தாராளமாகத் துறந்தான். வாணிபத்தில் வந்த ஆண்டுக்கு 20 ஆயிரம் வருமானத்தை இழந்தான்.

இந்தப் போரின் முடிவே ஈரோட்டு இராமசாமி மனைவி (ஈரோட்டிலுள்ள இரு பெண்மணிகளின்)யின் கரங்களிலேதான்இருக்கிறது என்று காந்தியடிகளே கூறினார்.

ஆமாம்! அடிமையுண்ட இந்தியாவில் தென்னகத்தின் தளபதியாக அவன் பவனி வந்தான். சுதந்தரம் கேட்டு சொத்துக்களை இழந்த **அந்த மனிதத் தூதன்தான் அதோ! போகின்றான்!**

தீண்டாமைப் 'பேயை'த் தீர்த்துக் கட்டிட அவன் வைக்கத்திலே கொடி உயர்த்தினான். சமுதாயத்தின் நான்கில் ஒரு பகுதி மக்களுக்கு அடைத்துக் கிடக்கும் வீதியின் கதவுகளைத் திறக்கக்கோரி சிங்கமென கர்ஜித்தான்! அதற்காக அவன் சிறையிலேயே பூட்டப்பட்டான்! இன்றைக்கு எல்லா கதவுகளும் எல்லோருக்கும் திறந்தே கிடக்கின்றன. அந்தச் சாதனையின் சின்னமாகப் பவனி வந்த **மனிதத் தூதன் அதோ! போகின்றான்!**

சாதியை ஒழித்திட அவன் பட்டிதொட்டியெல்லாம் நடந்தான். அதற்காக அவன் கல்லடிபட்டான்; சொல்லடிபட்டான். நிர்வாணமாக நின்ற தமிழ்ச் சமுதாயத்திற்கு அவன் தன்மான ஆடை தரித்தான். ஆனால் இன்றைக்கு எவர் கோட்டைக்கு வரினும் அவரது பள்ளியில் படித்த பிள்ளைகளே அவர்கள் என்ற நிலை உருவாகியிருக்கிறது.

தனது வாழ்நாளிலேயே இத்தகைய மகத்தான சாதனையை மணிமகுடமாக்கிக் கொண்ட **அந்த மனிதத் தூதன் அதோ! போகின்றான்!**

தமிழகத்தில், முதன்முதலாக சமதர்ம இயக்கத்திற்கு வித்தூன்றிய வித்தகனும் அவனே; புரட்சியில் மலர்ந்த சோபிதமான சோவியத் யூனியனில் இங்கிருந்து சென்று உலவிய முதல் மகனும் அவனே. அவன்தான் எங்களுக்கு மாமேதை லெனினை அறிமுகம் செய்தான். அவன்தான் மார்க்சையும், ஏங்கல்சையும் 'குடிஅரசு' ஏட்டின் மூலம் ஊரெல்லாம் நாடெல்லாம் அழைத்துச் சொன்றான். இன்றைக்கு உலகின் மூன்றில் ஒரு பகுதியில் ஆட்சிக் கொடியாகப் பறக்கின்ற செங்கொடியின் தத்துவப் பெரியார் - "கம்யூனிஸ்ட் அறிக்கையை" முதன்முதலாக தமிழகத்தில் வெளியிட்டவனும் சுயமரியாதை சமதாமவாதிகளின் மாநாடு கண்டவனும் அவனே. நாற்பது ஆண்டுகளுக்கு முன்னே பொதுவுடைமைத் தத்துவங்களைப் புத்தகங்களாக நடமாட விட்டவனும் அவனே.

தேசிய விடுதலை இயக்கமா? அவனே முதல்வன்! பொதுவுடைமை இயக்கமா? - அவனே முன்னவன்! சுயமரியாதை இயக்கமா? அவனே முதல்வன்! தன்மான இயக்கமா? - அவனே முன்னவன்! மொழி காக்கும் இயக்கமா? அவனே முதல்வன்! **மனித இனத்தின் அந்தத் தூதன்தான் அதோ! போகின்றான்!**

அவன் கண்ட போராட்டங்கள் எத்தனை? ஆனால் மனித இனம் உய்யத்தான் அத்தனைப் போராட்டங்களையும் கண்டான்! அவன் ஒரு பிறவிப் போர் வீரன்! எங்கள் கட்டுத் தளைகளை அறுக்க அவன் போராடிக் கொண்டே இருந்தான். அவன் வயதில், அறிவில் முதியோன்! ஆனால் நாட்டின் வாய்மைப் போருக்கு என்றுமே அவன் இளைஞன்! **அதோ! மனித இனத்தின் அந்தத் தூதன் போகின்றான்! புகழ் சுமந்து போகின்றான்! எடுத்த காரியம் யாவினும் வெற்றி என்று நிறைவோடு போகின்றான்!**

ஆமாம்; அவன் எங்கே போகின்றான்? வாழ்க்கைப் பயணம் முடிந்தது என்று போகின்றானா? அவன் சிந்திக்கத் தெரிந்த மனிதர்களின் இதயங்களிலெல்லாம் குடிகொள்ளப் போகின்றான்? அறிவுக் கண் திறந்த உலகமெல்லாம் நீங்காத நிலை கொள்ளப் போகின்றான்! **அதோ! மனித இனத்தின் தூதன் போகின்றான்!**

# மதுரையில் நீட் எதிர்ப்பு கருத்தரங்கம் மணவிழாவோடு நடந்தது



*23-12-2017 வெள்ளிக் கிழமை, மாலை 6-00 மணியளவில், மதுரை மாட்டுத் தாவணி பேருந்து நிலையம் எதிரில் உள்ள இராமசுப்பு அரங்கத்தில், மதுரை மாவட்ட நீட் எதிர்ப்புக் கூட்டமைப்பின் சார்பாக நீட் எதிர்ப்புக் கருத்தரங்கம் நடைபெற்றது.*

முதல் அரங்கமாய் நடைபெற்றக் கல்வியாளர் அரங்கத்திற்கு நீட் எதிர்ப்புக் கூட்டமைப்பின், ஒருங்கிணைப்பாளர் ரபீக் ராஜா (இளந்தமிழகம்) தலைமை வகித்தார். குடியாத்தம் அரசுக் கலைக் கல்லூரி முன்னாள் முதல்வரும், கல்லூரி ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் மாநிலத் தலைவருமாகிய முனைவர் ப.சிவக்குமார், மதுரைக் கல்லூரியின் முன்னாள் முதல்வரும், தமிழ்நாடு புதுச்சேரி மக்கள் சிவில் உரிமைக் கழகத்தின் பொதுச் செயலாளருமாகிய முனைவர் முரளி, கல்வியாளர் பர்வதவர்த்தினி ஆகியோர் உரையாற்றினர்.

அடுத்து நடைபெற்ற அரசியல் அரங்கிற்கு, தமிழ்ப்புலிகள் கட்சியின் முகிலரசன் தலைமை வகித்தார். விடுதலை சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் கனியமுதன், தமிழக மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர் கே.எம். செரீப், தமிழ்நாடு மக்கள் கட்சியின் தலைவர் மீ.த. பாண்டியன் ஆகியோர் உரையாற்றினர். குறிஞ்சியர் விடுதலை இயக்கத்தின் தோழர் ஆனந்தி தீர்மானங்களை முன்மொழிந்தார். திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரையோடு கருத்தரங்கம் நிறைவு பெற்றது.

**கருத்தரங்கில் மணவிழா :** 23-12-2017 வெள்ளிக் கிழமை, மதுரை, இராமசுப்பு அரங்கில் நடைபெற்ற நீட் எதிர்ப்புக் கருத்தரங்கத்தினிடையில் ஒரு வாழ்க்கை இணையேற்பு நிகழ்வும் நடந்தேறியது.

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், செட்டியூரைச் சேர்ந்த இராசேந்திரன், இராசாமணி இணையரின் மகன் பூபதிதாசுக்கும், கவலாண்டியூர் சம்பத் இராஜேஸ்வரி இணையரின் மகள் தாரணிக்கும், தமிழ்நாடு மக்கள் கட்சியின் தலைவர் மீ.த.பாண்டியன் உறுதிமொழிகள் கூறி, வாழ்க்கைத் துணைநல ஒப்பந்தத்தை நிறைவேற்றி வைத்தார். மணமக்கள் மணவிழா மகிழ்வாக பெரியார் முழக்கம் வளர்ச்சி நிதியாக ரூ.10,000 (பத்தாயிரம்) வழங்கினர்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

பகுதிகளில் சென்னை மாவட்ட கழகத் தோழர்கள் செப்.23 தொடங்கி, செப்.28 வரை இரண்டாம் கட்ட பரப்புரைப் பயணம் நடத்தினர். செப்.17இல் தமிழகம் முழுதும் கழகத் தோழர்கள் பெரியார் பிறந்த நாள் விழாவை எடுத்தனர்.

**அக்டோபர் :** சென்னையில் ஜாதி ஒழிப்புக் களம் நோக்கி இளைஞர்களை அழைக்கும் இளம் பெண் போராளிகள் மாநாடு எழுச்சி யுடன் நடந்தது. தமிழகம் முழுதுமிருந்தும் தோழர்கள் மாநாட்டுக்கு திரண்டு வந்திருந்தனர். கோவையில் மத்திய அரசின் அச்சகம் மூடப்படுவதை எதிர்த்து கழகம் ஆர்ப்பாட்டம் நடத்தியது. கேரளா கோயில்களில் தலித் அர்ச்சர்கள் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தமிழ் நாட்டில் அர்ச்சகர் பயிற்சி பெற்ற தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட இளைஞர்களை அர்ச்சகர்களாக்கக் கோரி சென்னையில் தலைமைச் செயலகத்தை முற்றுகையிடும் போராட்டத்தை நடத்தி தோழர்கள் கைதானார்கள்.

**நவம்பர் :** நவம்பர் 26இல் ஜாதி ஒழிப்புக்காக பெரியார் அறிவித்த அரசியல் சட்ட எரிப்புப் போராட்டத்தில் பங்கேற்று 1957இல் சிறையேகிய போராளிகளை நினைவுகூர்ந்து சூலூரில் ஜாதி ஒழிப்பு, சட்ட எரிப்பு நாள் பொதுக் கூட்டம் நடந்தது.

**டிசம்பர் :** தமிழ் தெரியாதவர்களும், தமிழ்நாட்டைச் சாராதவர்களும் தமிழக அரசின் வேலைவாய்ப்புக்கு விண்ணப்பிக்கலாம் என்ற தமிழ்நாடு தேர்வாணையக் குழுவின் அறிவிப்பை திரும்பப் பெறக் கோரி கழகம் ஆர்ப்பாட்டங்களை நடத்தியது. சென்னை, காஞ்சிபுரம், திண்டுக்கல், மேட்டூர், திருப்பூர், ஈரோட்டில் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. ஈரோட்டில் பெண்கள் சுயமரியாதை மாநாடு எழுச்சியுடன் நடந்தது (டிச.16). சென்னையில் குடிசைப் பகுதி மக்களை கட்டாயப் படுத்தி வெளியேற்றியதைக் கண்டித்து முற்றுகைப் போராட்டம் நடத்தி தோழர்கள் கைதானார்கள். டிச.29இல் சேலத்தில் கழகத் தலைமைச் செயற்குழு கூடியது. கழக சார்பில் 2018ஆம் ஆண்டுக்கான நாட்காட்டி தயாரிக்கப்பட்டது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 29th December 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN